மீள்திறன்மிக்க முதலீட்டுப் பட்டியலை உருவாக்குகிறோம்

எதிர்காலத்திற்கானச் சிந்தனையுடன்

எங்களது 50 வது ஆண்டில், நாங்கள் கடந்தகாலப் படிப்பினைகளை மனதில் நிலைநிறுத்தி, தன்னம்பிக்கை, துணிச்சல், மனத்திடம் ஆகிய சீரியப் பண்புகளுடன் எதிர்காலத்தை நோக்கிச் செயல்படுகிறோம்.

சிறப்பாகச் செய்வதிலும், சரியாகச் செய்வதிலும், நல்லன செய்வதிலும் கடப்பாடு கொண்டு, நீடித்த நிலைத்தன்மையை மையப்படுத்தும் மீள்திறன்மிக்க, எதிர்காலத்திற்கானச் சிந்தனைமிகுந்த முதலீட்டுப் பட்டியலை உருவாக்குகிறோம் – அதனால் ஒவ்வொரு ***தலைமுறையும்*** செழிப்படையும்

தெமாசெக் ஆய்வு 2024 சிறப்பம்சங்கள்

50 YEARS
BY GENERATIONS *for Generations*

சந்தைச் சுழல்களுக்கு மத்தியில் முதலீட்டுப் பட்டியலை வளர்க்கிறோம்



7%[1]
பங்குதாரருக்குரிய 20 ஆண்டின் ஆதாயம்

6%[1]
பங்குதாரருக்குரிய 10 ஆண்டின் ஆதாயம்

NPV **S$7பி**[1] அதிகரிப்பு
முந்திய ஆண்டைவிட
சென்ற ஆண்டைவிட MTM NPV **S$9பி**[4] அதிகரிப்பு

S$389பி[1]
நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு (NPV)

எங்களது பட்டியலிடாத முதலீட்டுப் பட்டியலை சந்தைக்கேற்ப மதிப்பிட்டதால் கிடைத்த S$31பி[3,5] கூடுதல் மதிப்பையும் சேர்த்து, **சந்தைக்கேற்ப மதிப்பிடப்பட்ட (MTM) NPV மதிப்பு**

S$420பி[3,5]

பட்டியலிட்ட, பட்டியலிடாத சொத்துகளின் தரமான முதலீட்டுப் பட்டியல்

எங்களது முதலீட்டுப் பட்டியலில் **52%**[1,3] பட்டியலிடாத சொத்துகளாக இருப்பதால், எங்களது பட்டியலிடாத சொத்துகளை சந்தைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட மதிப்பில் அறிவிப்பதே சக தொழில்துறை நிறுவனங்களின் நடைமுறைகளை ஒத்திருக்கும்.





ஆசியாவில் வேரூன்றிய உலகளாவிய முதலீட்டாளர்

கடந்த பத்தாண்டுகளாக, எங்களது முதலீட்டுப் பட்டியலை முனைப்புடன் மாற்றியமைத்து வருகிறோம். நீண்டகாலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல ஆதாயங்களை ஈட்ட, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள எங்கள் வெளிப்பாட்டை இரட்டிப்பாக்கி இருக்கிறோம்.

தலைமையகங்கள்[2] (%)

	2024	2014
சிங்கப்பூர்	53	61
சீனா	13	16
இந்தியா	5	2
ஆசிய பசிபிக் (சிங்கப்பூர், சீனா, இந்தியா தவிர்த்து)	2	5
அமெரிக்கா	17	7
ஐரோப்பா, மத்திய கிழக்கு & ஆப்ரிக்கா	10	9

அடிப்படை நாட்டு வெளிப்பாடு[2,8] (%)

	2024	2014
சிங்கப்பூர்	27	31
சீனா	19	25
இந்தியா	7	5
ஆசிய பசிபிக் (சிங்கப்பூர், சீனா, இந்தியா தவிர்த்து)	12	21
அமெரிக்கா	22	10
ஐரோப்பா, மத்திய கிழக்கு & ஆப்ரிக்கா	13	8

எங்கள் செயல்திறன் கண்ணோட்டத்தைப் படிக்க குறியீட்டை வருடுங்கள்

1 எங்களது பட்டியலிட்ட முதலீடுகளைப் பங்கு விலைகளிலும் பட்டியலிடாத முதலீடுகளைச் தோராம் கணிக்கப்பட்ட ஏடு மதிப்பிலும் மதிப்பிட்டதன் அடிப்படையிலானது. இந்த விளைபலத்தில் இடம்பெற்றுள்ள நிதிநிலைப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் 31 மார்ச் 2024 நிலவரப்படி S$389 பில்லியனாக இருந்த எங்களது நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பைச் சார்ந்தவை.

2 31 மார்ச் நிலவரப்படி.

3 31 மார்ச் 2024 நிலவரப்படி.

4 அதுபோன்ற கணக்கீட்டு முறையைப் பயன்படுத்தும்போது, 31 மார்ச் 2023 மற்றும் 2022 முடிவுற்ற நிதி ஆண்டுகளைப் பொறுத்தவரை, எங்களது பட்டியலிடாத முதலீட்டுப் பட்டியலை சந்தைக்கேற்ப மதிப்பிட்டால் நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு முறையே S$411 பில்லியன் மற்றும் S$438 பில்லியனாக இருக்கும்.

5 எங்களது பட்டியலிடாத முதலீட்டுப் பட்டியலைப் பொறுத்தவரை, முதலீடைப் பெறும் நிறுவனத்தின் அண்மைய நிதிநிலை, ஒப்பிடத்தக்க பொது நிறுவனங்களின் சந்தைப் பெருக்கம், அல்லது வருமான அணுகுமுறை போன்ற சந்தை அணுகுமுறைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட நாங்கள் குறிக்கிறோம்.

நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் நீடித்த நிலைத்தன்மையை மையமாகப் புகுத்துகிறோம்

நீடித்த நிலைத்தன்மையே மையம் - நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல மதிப்பு வழங்கப்படவேண்டும் என்ற எங்களின் கொள்கையிலிருந்து, ஓர் அமைப்பாக நாங்கள் செயல்படும் முறை, எங்களது முதலீட்டுப் பட்டியலை வடிவமைக்கும் முறை, நீடித்து நிலைக்கவல்ல தொழில்களின் நிர்மாணிப்பில் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களை ஈடுபடுத்தும் விதம் ஆகியவற்றுக்கு வழிகாட்டும் எங்களின் உத்தி வரை.

முதலீட்டுப் பட்டியலின் நிகர கரியமிலவாயு வெளியேற்ற இலக்குகள்
2010-ன் வெளியேற்ற அளவு 2030-க்குள் பாதியாகக் குறைக்கப்படும்
2050-க்குள் நிகர பூஜ்ஜியம் நிலை அடையப்படும்

27 முதல் 21[9] மில்லியன் tCO_2e[10]
மொத்த முதலீட்டுப் பட்டியலின் கரியமிலவாயு வெளியேற்றம்[11]

116 முதல் 92[9] tCO_2e/S$M வருமானம்
முதலீட்டுப் பட்டியலின் மதிப்பிடப்பட்ட சராசரி கரியமிலவாயு உக்கிரநிலை[12]

எங்களது முதலீட்டுப் பட்டியலின் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான உத்தி

கரியமிலவாயு குறைவாகவுள்ள பொருளாதாரத்தை உருவாக்க முதலீடு செய்யப்படும்
ELECTRIC HYDROGEN · Form energy · H2green steel · OLA · Solugen

எங்களது முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களில் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்
SINGAPORE AIRLINES · sembcorp · Olam · PSA · STTelemedia

கரியமிலவாயு சந்தைத் தீர்வுகளுக்குத் துணைபுரியப்படும்
GenZero · Climate Impact X

எங்களது முதல் நீடித்த நிலைத்தன்மை அறிக்கையைப் படிக்க குறியீட்டை வருடுங்கள்

சமூகப் பொறுப்பாண்மை

2003 முதல், எங்களது இடர் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவுக்கு மேற்பட்ட நிகர லாப ஆதாயங்களின் ஒரு பகுதியை சமூக அன்பளிப்புகளுக்காக ஒதுக்கி வருகிறோம். நாங்கள் வழங்கும் அன்பளிப்புகளின் அடிப்படைப் பயனாளரான தெமாசெக் அறநிதி, எங்களது லாப நோக்கற்ற பங்களிப்பாளர்கள் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திட மானியங்கள் வழங்குகிறது.

தெமாசெக் அறநிதிக்கு தெமாசெக் இதுவரை வழங்கியுள்ள அன்பளிப்புகள், சிங்கப்பூரிலும் வெளிநாடுகளிலும் **சுமார் 3.7 மில்லியன் பேரின் வாழ்க்கையில்** நல்ல திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

TEMASEK TRUST
TEMASEK FOUNDATION · TEMASEK LIFESCIENCES LABORATORY · STEWARDSHIP ASIA · Mandai NATURE · CIIP Centre for Impact Investing and Practices · PAA Philanthropy Asia Alliance · TEMASEK SHOPHOUSE

T-Spring சமூக அன்பளிப்பு

எங்களது 50 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, "T-Spring" அமைப்புக்கு தெமாசெக் **S$150 மில்லியன் வழங்கியுள்ளது**. ஆற்றல்களை வளர்ப்பதற்காக வழங்கப்படும் இந்தச் சமூக அன்பளிப்பு, சிங்கப்பூரின் ஊழியர் அணியும் அமைப்புகளும் வித்தியாசமான உலகுக்கு ஏற்பத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள பங்களிக்கும்.

T-Spring தமது பங்காளிகளுடன் சேர்ந்து **மூன்று முக்கிய துறைகளில்** திட்டங்களைச் செயல்படுத்தும்:

ஊழியரணியின் திறன் மேம்பாடு
பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய துறைகளில் ஊழியர்களின் திறன் மேம்படுத்தப்படும். மூத்தோர், உடற்குறை உள்ளவர்கள், மனவளர்ச்சிக் குறைபாடுகள் உள்ளவர்கள் ஆகியோரின் வேலைத்தகுதி மேம்படுத்தப்படும்

உபகாரச்சம்பளங்கள்
தொழில்துறைகளுக்குத் தேவைப்படும் திறன்களைக் கொண்ட வலுவான திறனாளர்கள் உருவாக்கப்படுவார்கள்

வல்லுநர் ஆய்வுதியத் திட்டங்கள்
நிபுணத்துவத் திறனை வளர்க்கவும், புத்தாக்கத்தைத் தூண்டவும், சிங்கப்பூரின் முன்னேற்றத்திற்கான தீர்வுகளை உருவாக்கவும் தொழில்துறை வல்லுநர்கள் வரவழைக்கப்படுவார்கள்

தெமாசெக்கின் 50 வது ஆண்டு நிறைவு அன்பளிப்பு பற்றி மேல்விவரம் அறிய குறியீட்டை வருடுங்கள்

6 சிங்கப்பூரில் தலைமையகம் அமைத்திருக்கும் முக்கிய முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களை மட்டுமே உள்ளடக்குகிறது.

7 ஆறாம்க் கட்டத்திலுள்ள நிறுவனங்களை உள்ளடக்குகிறது.

8 அடிப்படைச் சொத்துகளின் அடிப்படையிலான பகிர்வு.

9 31 மார்ச் 2024 முடிவுற்ற ஆண்டுக்குரியது.

10 tCO_2e என்பது புவிவெப்ப வாயு வெளியேற்றக் கணக்கீட்டிலும் அறிவிப்பிலும் பயன்படுத்தப்படும் வழக்கமான அளவீடான பத்து கணக்கிலான கரியமிலவாயு நிகரைக் குறிக்கிறது.

11 மொத்த முதலீட்டுப் பட்டியலின் கரியமிலவாயு வெளியேற்றம் என்பது tCO_2e அளவீடில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எங்களது மொத்த முதலீட்டுப் பட்டியலுடன் தொடர்புடுத்தப்படும் மொத்த வெளியேற்றத்தை (ஸ்கோப் 1 மற்றும் ஸ்கோப் 2) காட்டுகிறது. தனியார் பங்குமுதல் நிதிகள், கடன்பற்றுகள், இதர சொத்துகள் ஆகியவற்றிலுள்ள எங்களது முதலீட்டு நிலைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

12 முதலீட்டுப் பட்டியலின் மதிப்பிடப்பட்ட சராசரி கரியமிலவாயு உக்கிரநிலை என்பது கரியமிலவாயு உக்கிர நிலையிலுள்ள நிறுவனங்களில் எங்கள் முதலீட்டுப் பட்டியலின் வெளிப்பாட்டை வருமான அடிப்படையில் காட்டுகிறது. இது tCO_2e/S$M வருமானமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கரியமிலவாயு வெளியேற்றங்கள், முதலீட்டுப் பட்டியல் மதிப்பீட்டின் அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன. (முதலீட்டுப் பட்டியலின் சந்தை மதிப்பின் அடிப்படையிலான முதலீட்டின் சந்தை மதிப்பு).

tmsk.sg/whatsapp தளத்தில் சேருங்கள்

தெமாசெக் ஆய்வு 2024 முழு அறிக்கையை **temasekreview.com.sg** இணையத்தளத்தில் வாசியுங்கள்

TEMASEK